**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.**

2026–ம் ஆண்டு **ஏப்ரல்** மாதம் 08–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.91/2022**

**பி.வா.சா:–1 (இளவரசன்)**

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பில்):–**

வாதிகள் எனது தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணிக்கும், விஜயா (எ) விஜயலட்சுமிக்கும் பிறந்தவர்கள் என்றால் சரிதான். ஆனால் எனது அப்பா பெயர் பாலசுப்பிரமணி இல்லை. சின்னதம்பி ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். வா.த.சா.ஆ.3 ஆவணமானது 1998 முதல் 2003 வருட காலகட்டத்திற்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட ரேஷன் கார்டு என்றும், அதில் குடும்ப தலைவர் பெயர் பாலசுப்பிரமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நானும், இதர பிரதிவாதிகளும் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணிக்கும், திலகா என்பவருக்கும் பிறந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தகப்பனாரும், வாதிகளின் தாயார் விஜயா என்பவரும் கடந்த 29.08.1979 தேதியில் காலியிடமாக கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்பு தான் தாவா சொத்தில் ஓட்டுவீடு, தார்சுவீடு ஆகியவை கட்டப்பட்டது என்றால் சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1986–ம் வருடம் பிறந்தேன். எனது தகப்பனாரும், வாதிகளின் தாயாரும் தாவா சொத்தை கிரயம் பெறுவதற்குண்டான தொகையை எவ்வாறு ஏற்பாடு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்பா சொல்லி தெரியும். தாவா சொத்தில் உள்ள ஓட்டுவீடு, தார்சு வீடு ஆகியவற்றை எந்த தொகையை கொண்டு கட்டினார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், அப்பா டீ கடை வைத்திருந்தார் அதிலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து கட்டினார். எனது அப்பா டீ கடை வைத்து வருமானம் ஈட்டி வந்தார் என்ற விவரம் நாங்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலும், என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லையென்றால் சரிதான். எனது தகப்பனார் பாலசுப்பிரமணியம் வாதிகளின் தாயார் விஜயா (எ)

விஜயலட்சுமி ஆகியோர்கள் வாதிகளுக்கு எப்படி திருமணம் செய்துவைத்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். வாதிகளுக்கு திருமணம் ஆனபோது எனக்கு எத்தனை வயதிருக்குமென்றால் பெரிய அக்காவிற்கு திருமணம் ஆன போது 9 வயதிருக்கும். வாதிகளுக்கு எளிமையான முறையில் தான் திருமணம் நடந்தது என்றால் பெரிய அக்காவிற்கு என் அப்பா திருமணம் செய்துவைத்தார். மற்ற இருவரும் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப திருமணம் செய்துகொண்டார்கள். எனது மற்ற இரண்டு அக்காக்கள் காதல் திருமணம் செய்துகொள்ளவில்லையென்றும், எனது அப்பா தான் அவர்களுக்கு எளிமையான முறையில் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஓட்டு வீடும், தார்சு வீடும் தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். தறிபட்டறையை எனது தகப்பனாரும், வாதிகளும் கூட்டாகத்தான் நிர்வாகம் செய்துவந்தார்கள் என்றால் சரிதான். ஓட்டு வீட்டில் என் அப்பா வசித்துவந்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பூங்கொடிக்கு என் அப்பா திருமணம் செய்துவைத்தார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி மாமா முறை உறவுக்காரரை காதல் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு எனது அப்பா தான் திருமணம் செய்துவைத்தார் என்பதற்கு திருமண அழைப்பிதல் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் படித்துக்கொண்டிருந்த காலகட்டம் வரை வாதிகளும், எனது தகப்பனாரும் கூட்டாக தறி தொழிலை கவனித்துவந்தார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்து அமைந்துள்ள இடத்தின் அருகிலேயே வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான். சுமார் 7, 8 வருடத்திற்கு முன்பாக எனது அப்பாவிற்கு உடல்நலம் சரியில்லாமல் போனதால் கோயமுத்தூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தோம் என்றால் சரியல்ல. ஈரோடு சுதா மருத்துவமனையில் அனுமதித்திருந்தோம். என் அப்பாவிற்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதிலிருந்து அவர் இறக்கும் வரை அடிக்கடி மருத்துவமனைக்கு சென்றுவருவார் என்றால் சரியல்ல. மாத்திரை வாங்குவதற்கு தான் போய்வருவார். என் அப்பா மருத்துவமனைக்கு செல்லும்போதெல்லாம் அவருடன் துணைக்கு யாராவது ஒருவர் சென்றுவருவார்கள் என்றால் சரிதான். 10.02.2005 தேதியில் வாதிகளின் தாயார் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். வாதிகளின் தாயார்

இறப்பிற்கு எனது அப்பா, எனது அத்தை தனலட்சுமி ஆகியோர்கள் சென்று இறப்பு சடங்கில் கலந்துகொண்டார்கள் என்றால் அப்பா போகவில்லை. அத்தை போனாரா, இல்லையா என்று எனக்கு தெரியாது. வாதிகளின் தாயார் இறப்பிற்கு என் அப்பாவும் சென்று கலந்துகொண்டார் என்றும், இந்த வழக்கிற்காக என் அப்பா போகவில்லையென்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் படித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் தறி தொழில் மூலமாக வந்த வருமானத்தில் வாதிகள் எனது தகப்பனாருடன் பகிர்ந்துகொண்டார்கள் என்றால் நான் 5ம் வகுப்பு படிக்கும் வரை எங்களுடன் இருந்தார்கள். அதற்கு பிறகு அவர்கள் இல்லை. என் அப்பா இறப்பதற்கு 1 வருடம் முன்பு வரை தாவா சொத்தில் உள்ள தறியை எனது அப்பாவுடன் வாதிகளும் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தார்கள் என்றும், தற்போது இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா 23.12.2020 தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் அப்பாவின் இறப்பு சடங்கில் வாதிகளும், எனது அத்தையும் கலந்துகொண்டார்கள் என்றால் சரிதான். எனது அப்பா இறந்த முதலாவது ஆண்டு சடங்கில் வாதிகளும், என் அத்தையும் கலந்துகொண்டார்கள் என்றால் வாதிகள் கலந்துகொண்டார்கள், அத்தை கலந்துகொள்ளவில்லை. அப்பா இறந்த முதலாவது வருட சடங்கில் என் அத்தையும் கலந்துகொண்டார் என்றும், இந்த வழக்கிற்காக வேண்டி கலந்துகொள்ளவில்லையென்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறப்பதற்கு முன்பு 10 வருடம் வரை தறி தொழிலில் ஈடுபடவில்லையென்றால் சரியல்ல. 5 வருடம் தறி தொழில் செய்தார். அதன் பிறகு ரிலையன்ஸ் பள்ளி பேருந்தில் வேலை பார்த்தார். என் அப்பாவின் இறுதி காலத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக தான் இருந்தார் என்றும், ரிலையன்ஸ் பள்ளி வேனில் வேலை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த 2 வருடம் கழித்து வாதிகள் எங்கள் வீட்டின் அருகிலுள்ள சந்திரன், குப்புசாமி ஆகியோர்கள் மூலமாக பாகபிரிவினை கேட்டார்கள் என்றால் அப்பா இறந்து 1 வருடம் கழித்து சாமி கும்பிட்ட பிறகு பாகம் கேட்டார்கள். என் அப்பா இறந்த 2 வருடம் கழித்து தான் வாதிகள் பாகம் கேட்டார்கள் என்றும், சாமி கும்பிட்ட பிறகு பாகம் கேட்கவில்லையென்றால் சரியல்ல.

வாதிகள் கடந்த 04.02.2022 தேதியில் தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். வாதிகள் கொடுத்த வழக்கறிஞரின் அறிவிப்பிற்கு நாங்கள் பதில் எதுவும் கொடுக்கவில்லையென்றால் சரிதான். வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிலேயே தாவா சொத்து பைமாஸ் எண்.28–ல் அமைந்துள்ளதாக குறிப்பிட்டு தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். நாங்கள் ஒரு தங்கராஜ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரய உடன்படிக்கை ரத்து பத்திரத்திலும், தாவா சொத்து பைமாஸ் எண்.28–ல் இருப்பதாக தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமிக்கும், எனது தகப்பனாருக்கும் 1974–ம் வருடம் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளேன்என்றும், அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். என் அப்பா சுய வருமானத்தை கொண்டு தான் தாவா சொத்தை கிரயம் வாங்கியதாக எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றும், அது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்பா சொல்லி தெரியும். வாதிகளின் தாயாருக்கு சுய சம்பாத்தியம் எதுவும் இல்லையென்றும், அவர்களது பெற்றோர்கள் சீர்வரிசை எதுவும் கொடுக்கவில்லையென்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிகளின் தாயாருக்கும், எனது தகப்பனாருக்கும் சரியான உறவு முறை இல்லையென்று எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றும், அதை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்பா சொல்லி தெரியும். வாதிகளின் தாயார் என் அப்பாவிற்கு சோற்றில் விஷம் வைத்துக்கொடுத்துவிட்டு வேறொருவருடன் சென்றுவிட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றும், அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். வாதிகளின் தாயார் எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த வா.த.சா.ஆ.2 பாக பாத்திய விடுதலை பத்திரத்தில் வாதிகளின் தாயாருக்கும், எனது தகப்பனாருக்கும் கணவன், மனைவி உறவு இல்லையென்று குறிப்பிட்டு எழுதப்படவில்லையென்றால் சரிதான். இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு மேற்கொண்டு சேர்ந்து வாழ முடியாத நிலை இருந்ததால் தான் பஞ்சாயத்தார்

முன்னிலையில் பாக பாத்திய விடுதலை பத்திரத்தை வாதிகளின் தாயாருக்கு எழுதிக்கொடுத்தார். பாக பாத்திய விடுதலை பத்திரமானது தாவா சொத்தில் தறி அமைப்பதற்காக கடன் வாங்க வேண்டி தான் வாதிகளின் தாயார் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும், எனது தகப்பனார் எங்களது தாயாரை 1982–ல் திருமணம் செய்துகொண்டதாக கூறியுள்ளோம் என்றும், அது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரிதான். எங்களது தாயாரை சட்டத்திற்கு புறம்பாக வாதிகளின் தகப்பனார் சேர்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. ஓட்டு வீட்டில் எத்தனை வீடு உள்ளது என்றால் 2 வீடுகள் உள்ளது. எனது அம்மாவை எனது அப்பா சட்டத்திற்கு புறம்பாக சேர்த்துக்கொண்டதால் தான் என் அம்மா ஒரு வீட்டிலும், என் அப்பா ஒரு வீட்டிலும் தனித்தனியாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. வாதிகளும், எங்களது தாயாரும், எங்களது அப்பாவுடன் ஒரே குடும்பாக ஒன்றாக இருந்ததாக வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் திருமணத்தை எனது தகப்பனாரும், எனது தாயாரும் சேர்ந்து நடத்திவைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. 2, 3 வாதிகள் காதல் திருமணம் செய்துகொண்டதாக சொல்லியுள்ளது தவறு என்றும், எனது தகப்பனார் தான் 2, 3 வாதிகளுக்கு திருமணம் செய்துவைத்தார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் திருமணத்திற்கு பிறகு வாதிகளுடன் வாதிகளின் தாயார் சென்றுவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள தறியை நானும், எனது சகோதரரும் மற்ற சகோதரிகளும் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றும், எனது தகப்பனார் இறப்பதற்கு ஒரு வருடம் முன்பு வரை வாதிகளும் தாவா சொத்திலுள்ள தறியை கூட்டாக அனுபவித்துவந்தார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எங்களது பெயரில் எழுதிவைத்த பி.த.சா.ஆ.1, 2 தான செட்டில்மெண்ட் ஆவணமானது அவர் நல்ல மனநிலையிலும், சுய சிந்தனையோடும் எழுதிவைக்கப்பட்ட ஆவணங்கள் இல்லையென்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த காலத்தில் என் அப்பாவிற்கு தோராயமாக 70 வயதிருக்குமென்றால் சரிதான். வா.த.சா.ஆ.6 ஆவணப்படி என் அப்பா இறக்கும்போது

அவருக்கு வயது 74 என்றால் சரிதான். என் அப்பா பி.த.சா.ஆ.1, 2 ஆவணப்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகு வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துகொள்ளவில்லையென்றால் அந்த சமயம் கொரோனா பெருந்தொற்று காரணமாக வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துகொள்ளவில்லை. 2021–ம் வருடம் தான் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துகொண்டோம். மேற்படி விவரம் எதிர் வழக்குரையில் சொல்லப்படவில்லையென்றால் சரிதான். மின் கட்டண ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரிதான்.என் அப்பா எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைப்படுத்தாததினால் தான் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துகொண்டு வீட்டுவரி, மின் கட்டணம் செலுத்தி ரசீது தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரியல்ல. என் அப்பா 1, 3 பிரதிவாதிகள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த விவரத்தை வாதிகளுக்கு தெரிவித்துவிட்டோம் என்று சொல்லியுள்ளோம் என்றும், எந்த மாத, வருடம் தெரிவித்தோம் என்றால் அப்பாவிற்கு சாமி கும்பிட்ட ஒரு வருடம் கழித்து 2021–ம் வருடத்திலேயே வாதிகளுக்கு சொல்லிவிட்டோம். நானும், எனது சகோதரரும் எனது தகப்பனாரின் உடல் இயலாமையை பயன்படுத்திக்கொண்டு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது சகோதரரும், எனது சகோதரருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் நானும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். எங்களை தவிர மற்றொரு நபரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். 2, 4 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் எவ்வித கருத்துவேறுபாடும் இல்லையென்றால் சரிதான். பி.த.சா.ஆ.1, 2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஏன் 2, 4 பிரதிவாதிகளிடம் சாட்சி கையெழுத்து வாங்கவில்லையென்றால் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டால் போதும் என்று சொன்னார்கள். 2, 4 பிரதிவாதிகளிடம் சொல்லிவிட்டு தான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொண்டோம். பி.த.சா.ஆ.1, 2 செட்டில் மெண்ட் ஆவணத்தில் உள்ள எனது தகப்பனாரின் ஒவ்வொரு கையெழுத்துக்கும் வேறுபாடு உள்ளது என்றும், அவர்

உடல் இயலாமை மற்றும் உடல் நடுக்கத்தில் இருந்ததால் தான் கையெழுத்திற்கு வேறுபாடு இருந்தது என்றால் சரியல்ல. நானும், எனது சகோதரரும் என் அப்பாவை ஏமாற்றி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டோம் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகள் தாவா தாக்கல் செய்த பின்பு தான் செட்டில் மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக்கோரி பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றும், அதை பொருத்து எங்களது தரப்பில் எவ்வித பதிலுரையும் தாக்கல் செய்யப்படவில்லையென்றால் தெரியாது. பி.த.சா.ஆ.1, 2 செட்டில் மெண்ட் ஆவணம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் வாதிகள் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று அறிவிக்கக்கோரி வழக்குரையை திருத்தம் செய்த பிறகு உரிய பதிலுரை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை, சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது என்றும், வாதிகள் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |